Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 181

National Tamil Daily தேசிய தினசரி

(12-8-65)

விசுவாவசு ஆடி 8 ரபி ஆகிர் பிறை 14 வியாழக்கிழமை

## நீரழிவு நோயுள்ளவர்கள் கார் ஓட்டக் கூடாது

ஹாம்பர்க் (ஜேர்மனி) ஆக. 11

போக்குவரத்து விபத்துகளுக்கும் வியாதிகளுக்கும் உள்ள உறவு என்ன என்பதுதான் இன்று மேற்கு ஜெர்மனியில் இருந்து வருகிற அவசரமான ஆனால் முக்கியமான கேள்வி? உலகில் இன்று நாளுக்குநாள் போக்குவரத்து விபத்துகள் கூடிக்கொண்டே போகின்றன; சராசரி நாள் தோறும் இப்படிப்பட்ட விபத்துகளில் 1200 பேர் உயிர் இழக்கின்றனர்; மற்றும் 40,000 பேர் காயம் அடைகின்றனர் ஆகவே போக்குவரத்து விபத்துகளினால் வியாதிகள் உண்டாகின்றனவா என்ற வினாவிற்குச் சரியான விடையளிப்பதென்பது அவ்வளவு எளிதல்ல. விபத்துகளினால் வியாதிக்கு ஆளானவர்கள் 1 சதவிகிதம் என்கின்றனர் சிலர்; இன்னும் சிலர் வியாதிக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை 60 சதவிகிதத்திற்கும் அதிகம் என்கின்றனர்; புள்ளிவிபரங்களை ஊர்ந்து நோக்கினால் இந்த உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரியவரும்.

ஆனால் போக்குவரத்து விபத்துகளில்மாட்டிக்கொண்டவர்களிடம் சிகிச்சைக்கு வருகிறவர்களிடம் கொஞ்சகாலத்திற்குக் கார் ஓட்டுவதை அடியோடு விட்டொழித்துவிடுங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் தரப்புக்கு பெருஞ்சேதம்

## காஷ்மீர் ஊடுருவல் பற்றி கடைசி தகவல்கள்

## ஸ்ரீநகர் - ஜம்மு ரஸ்தா தொடர்பு இருக்கிறதாம்

ஸ்ரீநகர், ஆக, 11

காஷ்மீரில் ஊடுருவல் நடத்திய பாகிஸ்தானியருக்குப் பெரும்சேதம் ஏற்பட்டிருப்பதாயும், உள்ளே வந்தவர்களைப் பிடிக்கவும், மேலும் ஊடுருவல் செய்யாதபடி தடுக்கவும் இந்தியத் துருப்புக்கள் எல்லைக்கோடு நெடுகிலும் நகர்ந்துகொண்டிருப்பதாயும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன

ஊடுருவல் செய்த பாகிஸ்தானியர் பலர் உயிரோடு சிறை பிடிக்கப்பட்டிருக்கின்றனரென்றும், சோவியட் அடையாளங்களிலிருந்த அவர்கள் பாகிஸ்தானியப் பயிற்றப்பட்ட ஆஸாத் காஷ்மீரைச் சேர்ந்த சிவப்படை வீரர்கள் எனத்தெரிவதாகவும் டில்லியில் இன்று அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீநகர்—ஜம்மு பிரதான வீதியை பாகிஸ்தானியர் துண்டித்துவிட்டார்கள் என்ற செய்தியை டில்லி அதிகாரிகள் இன்று மறுத்ததுடன், தகவல் தொடர்புகூட வழக்கம் போல் நடைபெறுவதாயும், ஏராளமான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் பாகிஸ்தானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாயும் தெரிவித்தனர்.

அதேசமயம் "காஷ்மீரின் குரல்" என்ற வானொலி நிலையம் பாகிஸ்தானியப்பகுதியில் இருப்பதாயும் அவர்கள் தெரிவித்தனர்.——

## அபிவிருத்தி குன்றிய நாடுகளின் ஏற்றுமதியை அதிகரிக்கயோசனை

### ஜெனிவா மகாநாடு பரிசீலனை

ஜெனிவா, ஆக. 11

அபிவிருத்தி குன்றிய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யும் கைத்தொழில் பொருட்கள் அதிகரிக்கும் விஷயம் பற்றி ஜெனிவாவில் கூடிய 44 நாடுகளின் மகாநாடு ஆராய்ந்தது.

உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியை பலவகைப்படுத்தும் பணி பற்றியும் மகாநாடு ஆராய்ந்தது.

சமீபத்தில், அபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஏற்றுமதிகளே அதிகரித்திருப்பதாயும் இதனால் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் ஏற்றுமதி வருமானம் குறைந்து வருகிறது என்றும், அபிவிருத்தி குன்றிய நாடுகளின் ஏற்றுமதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்றும் மகாநாட்டில் கருத்து நிலவுகிறது.

அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு ஏற்கனவே ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருமானம் குறைந்து வருகிறது எனக் கூறப்பட்டது.

## "திரு. மெண்டிஸ் வெளிநடப்பு செய்தது தவறு"

### உலக தொழிற்சங்க சம்மேளன காரியதரிசி அறிவிப்பு

பிராக், ஆக, 11

"1963-ல் நடைபெற்ற இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (சி டி யூ எப்) 16-வது மகாநாட்டிலிருந்து மெண்டிஸ் வெளிநடப்புச் செய்தது தவறு இக்கூற்றை உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் உத்தியோகபூர்வமாக வெளியிடுகிறேன்" என உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி லூயி சைலன் சம்மேளன நிர்வாகக் கமிட்டியின் 29-வது கூட்டத்தில் கூறினர்.

இக்கூட்டம் செக்கோஸ்லவேக்கியாவின் தலைநகரான பிராகில் நடைபெற்றது இக்கூட்டத்தில் இலங்கையின் தொழிற்சங்க நிலைமை பற்றி நடந்த விவாதத்தின் முடிவின் போதுதான் லூயி சைலன் மெண்டிஸைப் பற்றி மேற்கண்டவாறு பிரகடனம் செய்தார்

மேலும் அவர் சி டி யூ எப்புக்கும், சி எப் டி யூ வுக்குமிடையே ஐக்கியம் இருக்கவேண்டுமெனவும், ஐக்கியம் காண்பதற்காக இரு தரப்பினரும் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார். இலங்கையில தொழிற்சங்க ஐக்கியம் பற்றிய பிரச்சினை அங்கு நாட்டிலேயே தீர்க்கப்படமுடியுமே தவிர பிராக்கிலல்ல எனவும் குறிப்பிட்டார் இரு தரப்பினரும் விரும்பினல் உலக தொழிற்சங்க சம்மேளனம் உதவுவதற்குத் தயாராயிருக்கின்றது என்றும் சி டி யூ எப் உறுதியாகப் பின்பற்றிவந்த தொழிற்சங்க ஐக்கிய கொள்கையை அடிப்படையில் ஆமோதிப்பதாகவும் லூயி சைலன் கூறினர். இக்கூட்டத்திற்கு விசேஷமாக அழைக்கப்பட்ட சி டி யூ எப் பின் பொதுக்காரியதரிசியான திரு என். சண்முகதாசன் உலக தொழிற்சங்க சம்மேளன நிர்வாகக் கமிட்டியின் இக்கூட்டத்தில் சி டி யூ எப் பின் பற்றிய தொழிற்சங்க ஐக்கியக் கொள்கையை விளக்கப்படுத்தினர்.

திரு. என் சண்முகதாசன் இலங்கையின் தொழிற்சங்க நிலைமையைப் பற்றிய விவாதத்தை ஆரம்பித்துவைத்தார். சி டி யூ எல் பின ஏற்பட்ட பிளவு தொழிற்சங்க இயக்கத்திற்குப் பெரும் தீங்கை விளைவித்துள்ளது எனக்கூறிய திரு சண்முகதாசன் சி டி யூ எப் பை விட்டுச் சென்றசகல அங்கத்தவர்களும் திரும்பி வந்தால் வரவேற்கப்படுவார்களெனக் குறிப்பிட்டார், அல்லது ஐக்கியத்திற்காக வேறு ஏதாவது பிரேரணைகள் இருந்தால் சி டி யூ எப் அவற்றை ஆராய்ந்து பரிசீலனை செய்யும் என்றார். சி டி யூ எப் சகல விதமான பிளவுகளையும் எதிர்த்து நிற்கின்றது என்பதையும் பிளவை அகற்ற எதையும் செய்யுமென்பதையும் வலியுறுத்திக்கூறிய அவர், திரும் ஐக்கியப்படுத்தப்படும் சி டி யூ எப் பின் தலைவராக மெண்டிஸைத் தெரிவு செய்தல்வேண்டுமெனத் தானே பிரேரிப்பதாககூறினர். "ஐக்கியத்திற்கான எங்களின் நேர்மையான அவா இந்த அளவுக்கு விசாலமானதாகும்" என்றும் அவர் கூறினர்

ஆனல் சி டி யு எப் இரு நிபந்தனைகளை வலியுறுத்தும் முதலாவதாக பிளவுவாதிகளின் ஸ்தாபனமான சி எட டி யு கலைக்கப்படல்வேண்டும் இரண்டாவதாக ஒவ்வொருவரும் உயர் உறுப்பினர்களின் ஜனநாயக முடிவுகளின்படி நடந்துகொள்ளுதல் வேண்டும் வெளியிலிருந்து கருத்துக்கள் திணிக்கப்படக்கூடாதுஎன்றும் அவர் கூறினர்.

சி டி யு எப் புக்கு ஆதரவாகவும் உலக தொழிற்சங்கசம்மேளனத்தின் தலைமை உறுப்பினில் அதற்குரிய இடம் கிடைக்க வேண்டுமென்ற அதன் கோரிக்கைக்கு ஆதரவாகவும் கொரிய, சீனப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பேசினர். மெண்டிஸ் தனது பேச்சில் தான் மேலும் சி டி யு எப் அங்கத்தவரில்லை என்று ஏற்றுக்கொண்டுள்ள படியால் உலக தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்த ஒரு ஸ்தாபனத்தில் அவர் அங்கத்தவராகவில்லை என்ற காரணத்தினல் அவர் மேலும் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தவராகவோ அல்லது பொதுச் சபையின் அங்கத்தவராகவோ இருக்கமுடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்கள்,

வவுனியா, புதன்

வவுனியா கந்தசுவாமி கோவிலில் இருந்து நேற்று திருக்கேதீஸ்வரத்துக்கு பாதயாத்திரைக் கோஷ்டியொன்று புறப்பட்டுச் சென்றது. இக்கோஷ்டியினர் எல்லே ரூபா காவடியுடன் சென்றனர் வவுனியா நீர்ப்பாசன இலாகா காரியாலய உதவியாளர் திரு. வீரவப்பிள்ளை தலைமையில சுமார் 50 தொண்டர்கள்காவடி எடுத்து திருக்கேதீஸ்வரத்துக்கு சென்ருர்கள்.

## மாற்றுக்குறைந்தபவுண் நகைகள் கடைகளில் விற்பனை?

### அரசாங்கத் தலையீட்டுக்கு தூதுகோஷ்டி கோருமாம்

யாழ்ப்பாணம், புதன்

நகைக்கடைகளில் விற்கப்படும் பவுண் நகைகள் மாற்றுக் குறைந்ததாக இருப்பதாயும், 22 காரட் இருக்க வேண்டிய பவுண் நகைகள் 18 முதல், ஆக்கூடியது 20 காரட் வரைதான் இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

சரியான அசல் தங்கம் 24 காரட்டும், நகைகளுக்கான பவுண் 22 காரட்டும் இருக்க வேண்டும் என மேலும் கூறப்படுகிறது.

மாற்றுக் குறைந்த பவுண் நகைகள் அதன் அடக்க விலையைவிட உயர்வாக விற்கப்படுவது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் தற்போது இல்லாததால் இவ்விஷயத்தில் எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறதாம்.

பவுண் நகைகளை வழக்கமாக அணியும் பெண்கள் உட்பட, பலருக்கு அவற்றின் தராதரம் பற்றிய இரகசியம் தெரியாதது, நகை வியாபாரிகளுக்கு சாதகமாய் இருப்பதாக மேலும் கூறப்படுகிறது:

எனவே தங்கம், பவுண் ஆகியவற்றின் தராதரம் பற்றி மதிப்பீடு செய்யக் கூடிய நிபுணர்கள் அடிக்கடி நகைகளின் தராதரம் பற்றி பரிசோதனை இடுவதற்கேற்ற முறையில் சட்ட விதிகள் இயற்றப்பட வேண்டும் என நிதி மந்திரியைக் கேட்டுக்கொள்ள ஒரு தூது கோஷ்டி விரைவில் கொழும்பு செல்லும் எனத் தெரிகிறது,

## தற்காலிக வேலைநீக்கம

பண்டாரவளை, புதன்

பண்டாரவளை பல நோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் மீது பாவனையாளர்களால் சுமத்தப்பட்ட புகார்களைத் தொடர்ந்து சமாஜத்தின் இரு ஊழியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களை வேண்டுமென்றே புறக்கணிப்புச்செய்யும் ஆஸ்பத்திரி ஊழியர் மீது சுகாதார அமைச்சு கடும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. இவ்விதம் அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களைப் புறக்கணிப்பது அரசாங்கத்துக்கு அவமானத்தைத் தேடித்தருவதாக இருக்குமெனக் கருதப்படுவதாலேயே சுகாதார அமைச்சு இவ்வித நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

உதவிசுகாதார மந்திரி திருமதி விமலா கன்னங்கரா பல முக்கிய அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு சமீபத்தில் திடீர் விஜயம்செய்தபோது பல நோயாளிகள் கவனிப்பாரற்ற நிலையில் இருந்ததை அவர் நேரில் கண்டறிந்தார். இதைப்பற்றி விசாரணை நடத்துமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகில் அழகுள்ள பொருள்களைக் கண்டு ஏமாற்றம் அடையாதீர்கள். சான்று மயிலைப் பாருங்கள்.

—எமர்சன்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 28 (12 8-65)


## நோக்கமும் திட்டமும்

தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து நிதிமந்திரி நிகழ்த்திய உரை கண்டனமோ பெருமையோ இல்லாது நாட்டின் இன்றைய உண்மை நிலைமையை படம்பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது. நிதிமந்திரி பாராட்டுக்குரியவர்.

தமது வரவு-செலவுத்திட்டத்தின் நோக்கத்தை பதினொரு அம்சமாகச் சுருக்கித் தெளிவுபடுத்தியிருக்கிறார் நிதிமந்திரி. பதினொரு அம்சங்களும் இப்பத்திரிகையில் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நாட்டுக்குச் சவாலாகவுள்ள பெரிய பிரச்னைகளை நிதானத்தோடு பதினொரு அம்ச நோக்கம் எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதிமந்திரி தூண்டுதல்தான் அளிக்கலாம். இதர அமைச்சுகளும், வங்கி ஸ்தாபனங்களும், தொழில் கூட்டுஸ்தாபனங்களும் தனியார் துறையினரும் ஒத்துழைப்பு அளித்து இந்நோக்கங்களை நிறைவேற்றலாம். நாட்டின் நிதிநிலைமை ஸ்திரமடைய வேண்டுமாயின் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்கள் வேண்டும். உணவு, உபஉணவுப் பொருள்கள், உடுபிடவைகள், கட்டடச் சாதனங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட வேண்டும். திட்டங்களையும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய கால எல்லையையும் குறிப்பிட்டு தேசிய திட்டக்கழகமோ மந்திரிசபையோ இனியும் தாமதமின்றி உடனடியாக எழுத்தில் வெளியிடவேண்டும். அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து அவற்றை நிறைவேற்றுவதிலும் அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் உற்பத்தியை அதிகரிப்பதிலும் தான் நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. இதே சமயம் தொழில், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி ஆகியவைகள் விஸ்தரிக்கப்படுவதால் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். சரியான முறையில் திட்டமிட்டு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும் ஒவ்வொரு திட்டங்களையும் நிறைவேற்றிமுடிப்பதற்கு கால எல்லையும் நிர்ணயிக்கப்பட வேண்டும். இலங்கையுடன் சுதந்திரமடைந்த இந்தியா போன்ற இதர நாடுகள் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் முன்னேற்றமடைந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து அவைகள் பெறும் உதவிகள் பலவும் அபிவிருத்தி திட்டங்களுக்கே உபயோகப்படுத்தப்படுகின்றன. திட்டங்கள் நிறைவேற்றப்படும் காலத்தில் சிறிது கஷ்டம் அனுபவிக்கநேரிடினும் அந்நாடுகளின் எதிர்காலம் நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. பதினேழு வருடங்கள் கழிந்துவிட்டன இனியும் தாமதம் செய்வது நல்லதல்ல. திட்டமிட்ட அபிவிருத்திக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

## 'வழக்கறிஞர்கள் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும்'

நீர்கொழும்பு, புதன்

'கத்தோலிக்க வழக்கறிஞர்கள் அவர்களின் தரும சிந்தனையினாலும் நீதியினாலும் சிறந்த பயிற்சியினாலும் உலகத்திற்கும் வழக்காளிகளுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்' என்று நீர்கொழும்பு கத்தோலிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் திரு. இ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

"வழக்காளிகளுக்கு வழக்கறிஞர்கள் சிறந்த ஆலோசனை கூறவேண்டும். தன்னிடம் வரும் வழக்காளியிடம் வழக்கு வைத்து பயன் இல்லை என்று கண்டால் அதனை அப்படியே அவரிடம் கூறவேண்டும். ஒரு குறைந்த கட்டணத்தையும் கூடிய கட்டணத்தையும் வழக்கறிஞர்கள் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். வழக்கறிஞர்கள் நேர்மையாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்ள வேண்டும். ஒரு சம்பவத்தையொட்டி வழக்கில்லை என்று அறிந்து கொண்டும் ஒரு உண்மையற்ற வழக்கை நடாத்த வழக்கறிஞர்கள் உடந்தையாகயிருக்கக் கூடாது".

## சூரிய ஒளிக்குப்பதில் செயற்கை ஒளி

செய்சென் (ஜெர்) ஆக. 11

சூரிய வெளிச்சத்தினால் செடிகள் வளர்ந்து வளம் பெறுவது இயற்கையாக நடைபெற்று வருவது ஆனால் மேற்கு ஜெர்மனியில் செயற்கையாக மின்சாரத்தின் மூலம் ஒளிகளை உண்டாக்கி செடிகளை வளர்க்கிறார்கள். அதுவும் வளர்கிறது.

பழம் பெரும் மரங்களைக் கொண்ட ஒரு நவீன கட்டிடத்தின் நடுவே "பைடோட்ரன்" என்ற மரத்தின் கன்றுவைத்து செயற்கை ஒளியில் வளர்க்கப்பட்டது. இக் கட்டிடத்தில் எட்டு 'ஏர்கண்டிஷன்' அறைகளும், இரண்டு 'ரிபிரிஜிரேட்டட்' அறைகளும் இருக்கின்றன. இங்கு தனி மெர்குரி விளக்குகள் ஒளி வீசவைக்கப்பட்டுள்ளன. சோதனைக்காக உள்ள செடிகள் மீது இவைகள் ஒளியை செலுத்துகின்றன.

இந்தச்செடி விவசாய தாவர நூல், செடிபயிர்கள் பற்றிய கெய்செஸன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிலையத்திற்குப் பெருமையும் நல்ல புகழும் அளிக்கக்கூடியதாக உள்ளது. மூன்றுண்டுகளாக இச்செடி "பைடோட்ரன்" என்ற பெயர் கிரேக்கப் பெயர்களைத் தழுவி ஏற்பட்டது. செயற்கை வெளிச்சத்தைக் கொண்டு செடிகள் வளருமா என்ற வேறுவிதமான சோதனைகளுக்கும் இச்செடி பயன் பட்டுவருகிறது. சூரியவெளிச்சம் அளவுக்குச் செயற்கை மின்விளக்கு ஒளிகளைக் கொண்டு செடிகள், பயிர்கள் வளர்ந்து பயன் தரும் சோதனைகள் இங்கு சர்வசாதாரணமாக நடைபெற்று வருகிறது.

## உடன் பதில் அனுப்ப உத்தரவு

பம்பலப்பிட்டி, புதன்

சுகாதார அமைச்சுக்கும், சுகாதார இலாகாவுக்கும் பொதுமக்களிடமிருந்து வரும் கடிதங்களுக்கு உடன் பதில்கள் அனுப்ப வேண்டுமென சுகாதார அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. சி. பாலசிங்கம் சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் சுகாதார இலாகா அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த புகாரைத் தொடர்ந்தே நிரந்தரக் காரியதரிசி மேற்படி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## பாக்ஜலசந்தியில் எண்ணெய்வளம்

சென்னை, ஆக. 11

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள பாக்ஜலசந்தியில் எண்ணெய் கிடைப்பதற்கான சாத்தியம் இருக்கிறது என பெட்ரோல் மந்திரி கபீர் அறிவித்தார்.

## 100 வருடங்களின் பின் திருத்தப்படுகிறது

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் கோர்ட் கட்டடம் 100 வருடங்களுக்குப்பின் இப்போது தான் முதல்முறையாகத் திருத்தப்படுகிறது. இக்கட்டடம் டச்சுக்காரரால் கட்டப்பட்டது.

## சிங்கப்பூருக்கு அங்கீகாரம்

லண்டன், ஆக. 11

பிரிட்டன், இந்தியா உட்படப் பல நாடுகள் சுதந்திர சிங்கப்பூரை அங்கீகரித்திருக்கின்றன.

—

மீசாலை, புதன்

மீசாலை விக்கினேசுவர வித்தியாலய மெய்வல்லுநர் விளையாட்டுத் திறனாய்வு இன்று பாடசாலை விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

## ஐயாறன் சபை நடுவது

மேலே, விசேஷ கலரியிலிருந்து உலகத்தின் கண்களும் காதுகளும் கூர்ந்து கவனிக்கின்றன. பலதேச ஸ்தானிகர்களும் நிறைந்திருந்தனர். வயதோ அறுபதுக்கு மேலாகி விட்டது. நான்கு மணி நேரம் நட்டமே நின்று பார்லிமெண்டிலே வரவு-செலவுத் திட்டப் பிரசங்கத்தைச் செய்வதென்றால் சுலபமா? சங்கடமான இந்தக் காரியத்தை, அநேகமாக எல்லோருக்கும் திருப்தியளிக்கும் முறையில் நிதிமந்திரி வன்னிநாயக்கா செய்து முடித்தார். அடிக்கடி தண்ணீர் சாப்பிட்டு தொண்டையை நனைத்துக்கொண்டார். முதலில் சிறிது சிங்களத்தில் பேசி, பின்னர் எல்லாம் ஆங்கிலத்தில் படித்தார்.

• • •

நிதிமந்திரி வன்னிநாயக்கா அடக்கமானவர். எளிய சுபாவம். பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தவர். நிதிமந்திரி வேலை அவருக்குப் புதிதல்ல. ஒரு சமயம் உதவி நிதிமந்திரியாகவும் நிதி மந்திரியாகவும் கடமையாற்றியவர். அதனால் அவர் மிகத் தன்னம்பிக்கையுடனும், எதிர்க்கட்சி பீரங்கிகள் இடையிடையே வெடித்தபொழுதிலும் அதைப் பொருட்படுத்தாமல், நிதானத்தை இழக்காமல் பேசினார். பழைய நிதிமந்திரியை அவர் தாக்கவோ குறைகூறவோ இல்லை. இதற்குமாறாகச் சில விஷயங்களில், டாக்டர் என். எம். பின்பற்றிய வழியையே தாமும் பின்பற்றியுள்ளதாகச் சொன்னார்.

பகல் 2 மணிக்குக் கூட்டம் ஆரம்பம். "சபாநாயகர் வருகிறார்" என்று சார்ஜண்ட் சிங்களத்தில் அறிவித்ததும், சபை மெம்பர்கள் எல்லாரும் எழுந்து நின்றனர்; மேலே விசேஷ பிரமுகர்கள் காலரியிலிருந்த பலதேச ஸ்தானிகர்களும் எழுந்து நின்றனர். பேப்பர்காரர்களும் பொதுமக்களும் பலரும் நிற்கவில்லை. சபை நடவடிக்கைகளில், காலரியிலுள்ளவர்கள் யாரும் எவ்விதத்தும் பங்குபற்றக் கூடாதென்பதே நியதி.

முதலில் சபாநாயகர் சிங்களத்தில் நடவடிக்கைகளை ஆரம்பித்து பின்னர் அநேகமாக ஆங்கிலத்திலேயே பேசினார். சரியாக 2-15 மணிக்கு நிதிமந்திரி, பட்ஜட் பிரசங்கம் அடங்கிய கைப்பெட்டியுடன் வலப்புறத்திலிருந்து சபைக்கு வந்தார். நிதிமந்திரியைப் பலத்த கரகோஷத்துடன் சபை வரவேற்றது.

அதேசமயம் இடதுபுறமிருந்து எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஸ்ரீமா, புன்முறுவல் பூத்த முகத்துடன் வந்தார். சிவப்பு, நீல நிறங்களுடன் கூடிய ஆடை உடுத்தியிருந்த ஸ்ரீமா, சற்றே இளைத்திருந்தார். முன்னிருந்த பொலிவும் மகிழ்ச்சியும் காணவில்லை. என்றாலும் எதிர்க்கட்சியில் அவர் அமர்ந்திருந்தது. சபைக்கு அழகும், ஒருவித மதிப்பும் அளிப்பதாக இருந்தது.

• • •

மண்ணெண்ணெய், உருளைக் கிழங்கு வெங்காயம், பருப்பு, தானியவகைகள் முதலியவற்றின் தீர்வைகளை அடியோடு நீக்கிவிட்டதாக நிதிமந்திரி அறிவித்தபோது, சபையில் பலத்த சந்தோஷ ஆரவாரம் எழுந்தது. ஆனால் ஸ்ரீமா, டாக்டர் என். எம். உள்ளிட்டு எதிர்க்கட்சியினர் அனைவரும் அச்சமயம் பேசாமல் இருந்தனர். ஆனால் நிதிமந்திரி 6-40 மணிக்குப் பேசி முடித்து அமர்ந்தபோது, ஸ்ரீமா உள்ளிட்டு எதிர்க்கட்சியினரும் கரகோஷம் செய்து அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மிக நெருக்கடியான டணநிலையிலுள்ள இலங்கையில்

(6-ம் கலம் பார்க்க)

(5ம் கலத் தொடர்ச்சி)

வரவு-செலவுத் திட்டத்தை நிதிமந்திரி எப்படிச் சமர்க்கட்டப்போகிறார்? புதிய வரிகளை விதிப்பாரோ? வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க ஏதுவும் செய்வாரா? வெளிநாடுகளின் உதவிகள் அதிகம் கிடைக்க அவர் தூண்டுதல் ஏதும் அளிப்பாரா? என்று அறிய பலரும் ஆவலுடன் காத்திருந்தனர். மிகச் சங்கடமான இக்காரியத்தை, நிதிமந்திரி வன்னிநாயக்கா ஏழை, பணக்காரர், இலங்கையர், அந்நியர் இவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியவிதத்தில் பலபல செய்திகளைக் கூறி, தமது பெருங்கடமையை வெற்றிகரமாக முடித்தார். எல்லோரும் ஒத்துழைப்பின், இலங்கையின் எதிர்காலம் மேலாக இருக்கலாம்.

∴ ∴ ∴

"நஞ்சணுக் குஞ்சமிலாத பொழுதிலும்
நெஞ்சகநைந்து நினைமின்
நாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்த
வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ
ழுத்துமே"

—சுந்தரமூர்த்திநாயனார்

# நாட்டிலும் நகரிலும்

இன்னுமொரு வானொலி விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இலங்கையில் வானொலி சேவை பற்றி விசாரிப்பதற்கு மூன்று கமிஷன்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது கமிஷன் மேசர் கந்தையா வைத்தியநாதனின் தலைமையில் 1941-ம் வருடம் நிறுவப்பட்டது. இலங்கையில் ஓர் ஒலிபரப்பு சேவையை நடத்தவேண்டுமா என்று அரசாங்கம் கேட்டதற்கு இந்த விசாரணை சபை தான் 'ஆம்' என்று முடிவு கண்டு அதற்குப்பின் தான் ஒலிபரப்பு சேவை விருத்தியடைந்து ஒரு தனி இலாகாவானது.

இரண்டாவது கமிஷன் 1953-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதற்கு முன்னாள் நீதிபதி வீரசூரியா தலைமைவகித்தார். இவர்கள் செய்த சிபார்சுகளில் முக்கியமானதொன்று யாழ்ப்பாணத்தில் ஓர் உபவானொலி நிலையம் அமைக்க வேண்டுமென்பது. இது இன்னும் நிறைவேறவில்லை அதற்கிடையில் இந்த மூன்றாவது கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் மேற்படி சிபார்சை வற்புறுத்துவார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை. இருந்தபோதிலும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்ற பொதுச் சபைகளும் தனிப்பட்டவர்களும் யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலி நிலையம் அமைக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கி இக்கமிஷனுக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும், அது மட்டுமல்லாமல் ஒலிபரப்புசேவையில் என்னென்ன அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டுமென்று தோன்றுகிறதோ, அவற்றை இந்தக் கமிஷனின் காரியதரிசிக்கு தெரிவிக்கலாம். கலைஞர்களும் வானொலியின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட பிறரும் தங்கள் கருத்துக்களை இம்மாதம் 31-ம் திகதிக்கிடையில் 'ஒலிபரப்பு' தகவல் கமிஷன் தபால் ... அனுப்பலாம்.

ஆடிவேல் உற்சவத்திற்காக கொழும்புக்கு வந்திருக்கும் சின்ன மௌலானா சாகிபுவின் நாதஸ்வரக் கச்சேரியை செவ்வாய்க்கிழமை இரவு இலங்கை வானொலியார் அஞ்சல் செய்தார்கள். தொண்டைக்குழியில் பிடித்து நெரித்ததுபோல கச்சேரியின் நடுவில் அதை நிறுத்தியது கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு பெரும் ஏமாற்றமாய்போய்விட்டது. கச்சேரி நன்றாக மேளம் கட்டி சாகிபு அவர்கள் காம்போதிராகத்தை அழகாக வாசிக்க ஆரம்பித்து மூன்று நிமிடங்கள் ஆகவில்லை அஞ்சலை நிறுத்திவிட்டு எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டார்கள். குழந்தைக்கு இனிப்பைக் கொடுத்துவிட்டு அது அதை வாய்க்கு கொண்டு போகும் சமயம் தட்டிப் பறிப்பது போலிருந்தது.

இப்படியான விசேஷ நிகழ்ச்சிகள் நடக்கும்போது ஒலிபரப்பை பத்தரை மணிக்குமேலும் நீடித்தால் என்ன குறைந்துவிடும்? இந்தியாவில் விசேஷ நிகழ்ச்சிகள் இரவு பன்னிரண்டு மணிவரை ஒலிபரப்புகிறார்கள். இங்கும் இரண்டொரு ஊழியர்களுக்கு 'ஓவர் டைம்' கொடுத்து ஆயிரக்கணக்கான ரசிகர்களை மகிழ்வித்திருக்கலாம் விட்டுவிட்டார்கள்.

சின்ன மௌலானா சாகிபுவுடன் தவில் வாசிக்க வந்திருக்கும் வலங்கைமான் சண்முகசுந்தரம் இலங்கைக்கு புதியவரல்ல. யாழ்ப்பாணத்தில் பல வருடங்கள் இருந்து ரசிகர்களை மகிழ்வித்தவர். ஆனால் சின்ன மௌலானா இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவை என்று நம்புகிறேன். இவர்கள் இருவரையும் கேட்பதற்கு யாழ்ப்பாணத்தில் பலர் விரும்புகிறார்கள் எங்கோ ஒரு கோயில் திருவிழாவுக்கு இவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக ஒரு வதந்தி உலாவுகிறது. இது உண்மையானால் யாழ்ப்பாணத்து ரசிகர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள் தான்.

—'வழிப்போக்கன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீநகர் - ஜம்மு ரஸ்தா துண்டிக்கப்பட்டது?

## பாலங்கள், தகவல் தொடர்பு, பெட்ரோல் கிடங்குகள் ஆயுதச்சாலைகள் நாசம்

### இந்தியத் துருப்புகள் பெருமளவு மாண்டதாய் பாகிஸ்தான் தரப்பில் அறிவிப்பு

ராவல்பிண்டி, ஆக. 11

ஸ்ரீநகர் ஜம்மு பிரதான ரஸ்தாவை ஊடுருவல்காரர்கள் துண்டித்து விட்டதாயும், அநேக பாலங்களையும், பெட்ரோல் டாங்கிகளையும் அவர்கள் நாசமாக்கி விட்டதாயும் "காஷ்மீரின் குரல்" என்ற வானொலி நிலையம் அறிவித்ததாக பாகிஸ்தான் ரேடியோ கூறியது.

**உயிர்ச்சேதம் அதிகம்**

9 பாலங்கள் அழிக்கப்பட்டதாயும், டெலிபோன், தந்தி தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாயும், இந்திய ராணுவத்தின் 8 முக்கிய தலைமை நிலையங்கள் தாக்கப்பட்டதாயும், இந்தியத் தரப்பில் பெருந்தொகை உயிர்ச்சேதம் விளைவிக்கப்பட்டதாயும் மேலும் கூறப்பட்டது.

**பெட்ரோலுக்கு தீ**

மூன்று பெட்ரோல் சேமிப்பு நிலையங்களை, வெடிமருந்து கிடங்குகள், மூன்று ஆயுதச் சாலைகள் ஆகியன தீ மூட்டி எரிக்கப்பட்டதாய் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.

**ஹிந்துக்கள் திகில்**

காஷ்மீரிலுள்ள ஹிந்துக்கள் நிலைமைபற்றி பெரும் திகிலடைந்திருப்பதாயும், தங்கள் குடும்பங்களை அவர்கள் வெளியேற்ற ஆரம்பித்திருப்பதாயும், காஷ்மீர் மக்கள் விடுதலை வீரர்களுடன் ஒத்துழைத்து வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

**"இறுதி அடி"**

இந்தியாவுக்கு இதுதான் இறுதி அடி என்றும், நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள மக்கள் விடுதலை யுத்தத்தைத் தொடங்கிவிட்டார்கள் என்றும், இறுதிவெற்றி அவர்களுக்கே என்றும் "காஷ்மீரின் குரல்" அறிவித்தது.

**ஸ்ரீ நகரில் தடை**

ஊடுருவல்காரர்களைப் பிடிக்கும் பொருட்டு ஸ்ரீநகர் மஜிஸ்ட்ரேட் நகரின் உள்ளே வருவதற்கும் வெளியே வருவதற்கும் தடை விதித்திருக்கிறார்.

**பூட்டோ அறிக்கை**

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் காஷ்மீர் மக்கள் விடுதலை போராட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள் என்றும், இந்தியாவுக்கு இவ்விஷயத்தில் வெளி உதவி கிடைக்காது என்றும் கூறியிருக்கிறார்.

"17 ஆண்டு சுதந்திர போராட்டம் இப்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. விடுதலைக் கிளர்வாளரை இந்திய சிறைக்குள் போட்டிருக்கிறது. காஷ்மீர் பிரச்னையை அமைதியாகத் தீர்க்க ராஜதந்திர முறையில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்தன. அதன் பலனே புதியசம்பவம்" என்றும் அவர் கூறினர்.

# 2000 ஆண்டுகளுக்கு முந்திய சடலத்துக்கு சத்திர சிகிச்சை

டர்ஹாம், ஆக. 11

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் இறந்து போய் பாடம் செய்யப்பட்ட எகிப்திய சடலம் ஒன்றின் செயற்கை கையை வெட்டி எடுப்பதற்காக டர்ஹாம் பல்கலைக்கழகத்தின் கீழ்த்திசை கலைக்கான குல்பெங்கியன் மியூஸியத்து காப்பாளர் திரு பி எஸ் ராவ்சன் அதை அறுத்தார். வெகு காலத்துக்கு முன் இறந்த ஒருவரின் சடலத்துக்கு நடந்த முதலாவது ஆபரேஷன் இதுவேயாகும்.

அந்தக் கையை வெட்டியெடுத்த பிறகு ராவ்சன் குறிப்பிட்டதாவது:-

"அந்தக் கை எதனால் செய்யப்பட்டது? உயிரோடிருந்த காலத்திலே அது பொருத்தப்பட்டிருக்கிறதா, அல்லது மறுபிறவிக்காக எகிப்திய வாழ்க்கை முறைப்படி இறந்த பிறகு பொருத்தப்பட்டதா என்பனவற்றை அறிந்து கொள்ளுவதற்கு அது அவசியமாகும்.

உறுப்பு இழக்கப்பட்ட இடத்தின் மூளைக்கும் செயற்கை கைக்குமிடையே சேர்மானம் இருப்பதற்கான அறிகுறி இருக்குமானால் சடலம் உயிருடனிருந்த காலத்திலேயே அது அணியப்பட்டிருக்க வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

சவப் பெட்டியின் மீது எழுதப்பட்டுள்ளவற்றிலிருந்து அதனுள்ளிருந்த சடலமானது மிக உயர்ந்த பொதுப் பதவியில் இருந்தது என்றும், அது இன்றைய ராணுவ மேஜரின் பதவிக்கு இணையானது என்றும் தெரிகிறது.

எகிப்திய மன்னரின் சபைக்கு செல்கையில் மன்னரைக் காண்பதற்குரிய தகுதி இருக்க வேண்டுமென்பதற்காக செயற்கைக் கைபொருத்தப்பட்டிருக்கலாம்.

# ஹைதராபாத், பாட்னா நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள்

## தடியடி, பொலிஸ் சூடு

ஹைதராபாத், ஆக. 11

நேற்று இங்கு ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது பொலிசார் நான்குமுறை தடியடிப் பிரயோகம் செய்தார்கள்.

மாணவர்கள் தெருவிளக்குகளுக்குக் கற்களை வீசி, பஸ்களுக்குச் சேதம் விளைவித்தாய் அறிவிக்கப்படுகிறது.

கைகலப்புகளின் விளைவாக 8 மாணவர்களுக்கும், 1 பொலிசாருக்கும் காயம் ஏற்பட்டது. 38 பேர் கைதாகி ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

ஹைதராபாத், செகந்தராபாத ஆகிய நகரங்களில் 1 வாரம் 5 பேர்களுக்குமேல் கூடக்கூடாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பாட்னாவிலும் நேற்று சிறிய சம்பவங்கள் நடைபெற்றன. இரவு 8 மணி முதல் காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு அங்கு அமுல் நடத்தப்பட்டுவருகிறது. அண்டை ஜில்லாக்களில் பல பலாத்காரச் செயல்கள் ஏற்பட்டதாயும், ரயில்வே ஸ்டேஷன் ஒன்று தீ மூட்டப்பட்டதாயும், பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## சிலி புயலில் 15 பேர் பலி

சிலி, ஆக. 11

சிலியில் கடந்த 40 ஆண்டுகளில் ஏற்படாத அளவு பெரிய புயல் ஒன்று நேற்று ஏற்பட்டது. மணிக்கு 1600 மைல் வேகத்தில் வீசிய புயலினால் கடலலைகள் 58 அடி உயரம் எழும்பியதாயும், பல நகர் பகுதிகளிலும், துறைமுகங்களிலும் இதனால் அழிவு ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. ஆயிரக்கணக்கானோர் பத்திரமான இடங்களுக்கு வெளியேறினர். 15 பேர் மாண்டனர்.

---

## வருடமொன்றுக்கு 4 லட்சம் கார் களவு

வாஷிங்டன், ஆக. 11

அமெரிக்காவில் தற்போது கார் திருட்டு அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வருடமொன்றுக்கு சுமார் 4 லட்சம் கார் இங்கு திருட்டுப் போகிறதாம்.

## "மற்றோர் ஹிரோஷிமா வேண்டாம்"

— போப்பாண்டவர்

வத்திக்கான், ஆக. 11

உலகம் மற்றொரு ஹிரோஷிமாவைப் பார்க்காமலிருக்கட்டும் என்று போப்பாண்டவர் நேற்று பிரார்த்தித்தார்.

ஹிரோஷிமா தினத்தை முன்னிட்டு அவர் தமது கோடை வாசஸ்தலத்தில் யாத்ரீகர்களிடையே பேசுகையில் அணு ஆயுதங்களைத் தடைசெய்ய வேண்டும் என வற்புறுத்தினார். அம்மாதிரி மக்கள் படுகொலையும், பயங்கர அட்டூழியமும் இனி ஒருபோதும் நிகழாதிருக்க ஆண்டவனை பிரார்த்திக்குமாறும் அவர் கூறினர்.

---

## வியட்னாமில் 158 கொரில்லாக்கள் பலி

சைகோன், ஆக. 11

தென் வியட்னாமில் வியட்காங்கியரினால் முற்றுகையிடப்பட்டிருந்த ஒரு பகுதிக்கு அனுப்பப்பட்ட துருப்புக்களை கொரில்லாக்கள் தடுத்து நிறுத்திவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இங்கு நடைபெற்ற சண்டையில் 158 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர்.

டானங்குக்கு ஒரு மைல் தூரம்வரை வியட்காங்கியர் மோட்டார் பீரங்கிகளால் தாக்கினர் என்றும், ஹனோயில் இருந்து 160 கிலோ மீட்டர் தூரத்தில் அமெரிக்க விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

ஐ. நா. பாதுகாப்புசபையில் வியட்னாம்பற்றிய விவாதத்தினால் பலன் எதுவும் இல்லையென்று உறுப்பினர்கள் கருதுவதாகத் தெரிகிறது. வியட்னாமில் அனுமதி பேச்சுக்கள் நடைபெறுவதற்கு யுதாண்ட் தொடர்ந்து முயற்சிசெய்துவருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## கோஸிஜின் துருக்கி செல்வார்

மாஸ்கோ, ஆக. 11

ருஷ்யப் பிரதமர் திரு கோஸிஜின் துருக்கிக்கு விஜயம் செய்யவிருக்கிறார். ஆனால் இதற்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

# பெருமளவு ஊடுருவல்: பெருமளவு உயிர்ச் சேதம்

## ஐ. நா. வுக்கு பிரதம ராணுவ பார்வையாளர் அறிக்கை

நியுயோர்க், ஆக 11

பாகிஸ்தான் தரப்பிலிருந்து இந்திய காஷ்மீருக்குள் பெருமளவில் ஊடுருவல் நடைபெற்றிருப்பதாயும், இருதரப்பு மோதலில் அதிக உயிர்ச் சேதம் விளைந்திருப்பதாயும் காஷ்மீரிலுள்ள ஐ. நா. பிரதம ராணுவ பார்வையாளர் ஜெனரல் நிமோ யுதாண்டுக்கு சமர்ப்பித்துள்ள பூர்வாங்க அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

அறிக்கை பூர்வாங்கமாக இருந்தாலும் இந்திய நிலையை அது ஆதரிப்பதாக பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

**அமெரிக்காவின் கவலை**

வாஷிங்டனிலுள்ள இந்திய விசேஷ தூதர் அமெரிக்க ராஜாங்க மந்திரியைச் சந்தித்துக் காஷ்மீர் ஊடுருவல் பற்றி விவாதித்தார். காஷ்மீரில் ஏற்பட்டுள்ள புதிய அபிவிருத்தியை அமெரிக்கா பாரதூரமாகக் கருதுகிறது என வாஷிங்டன் செய்திகள் கூறின.

கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு கேவல்சிங் ராவல்பிண்டிக்குச் சென்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியிடம் காஷ்மீர் ஊடுருவல் பற்றி வாய்மூலமான ஆட்சேபனை தெரிவித்ததாய் அறியப்பட்டது.

**அல்ஜீரிய உத்திகளாம்**

ஜனாதிபதி அயூப்கான் உள்ளிட்ட பாகிஸ்தான் தலைவர்களின் பயமுறுத்தலுக்கு மத்தியில் இந்த ஊடுருவல் நடைபெற்றிருப்பதாயும் அல்ஜீரிய முறையிலான உத்திகளை காஷ்மீரில் கையாள்வது குறித்து பெரும் திட்டம் ஒன்று தயாராய் இருப்பதாக சமீபத்தில் பூட்டோ அறிவித்தது புதுடில்லியில் சுட்டிக்காட்டப்படுகிறது.

**இருட்டில் சண்டை**

நேற்றிரவும் இருட்டில் ஊடுருவாளர்களுடன் பல இடங்களில் கைகலப்பு நடந்ததாயும் ஜம்மு பகுதியிலும் பூஞ்ச்பகுதியிலுமே பெருமளவு ஊடுருவல் இருந்ததாயும் மேலும் அறிவிக்கப்பட்டது. பாலங்களையும் தகவல் தொடர்புகளையும் துண்டிப்பதே பாகிஸ்தானியர்களின் நோக்கமாய் இருக்கிறது என அறிவிக்கப்பட்டது.

**கல்வி நிலையங்கள் மூடப்பட்டன**

காஷ்மீரில் சண்டை நடக்கும் பகுதிகளில் கல்விநிலையங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றன.

தகவல் மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்று ஸ்ரீநகரில் முதன்மந்திரி சாதிக்கையும் இதர மந்திரிகளையும் சந்தித்துப் பேசினர். நிலைமை மிகவும் அபாயகரமாக இருப்பதாய் அவர் பின்பு கூறினர்.

திரு சாதிக், இந்தியப் பிரதமருடன் இடைவிடா தொடர்பு கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

**பயிற்சி பெற்ற ராணுவம்**

காஷ்மீரில் ஊடுருவிய பாகிஸ்தானியர் அதிகாரிகளும் சிப்பாய்களும் கொண்ட முழு பயிற்சி பெற்ற ராணுவத்தினர் என அறிவிக்கப்படுகிறது. இப்போது எல்லைக்கோடு நெடுகிலும் பரந்த அளவில் இந்தியத் துருப்புக்கள் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் ஆங்காங்கே பல இடங்களில் கைகலப்புகள் நிகழ்ந்துவருவதாயும் கூறப்படுகிறது. எல்லைக் கோட்டிலிருந்து 4 மைல் உள்ளே இந்தியப்பகுதிக்குள் நேற்று இரு கைகலப்புகள் நிகழ்ந்தன.

**மந்திரி சபை கூட்டம்**

நேற்று காஷ்மீர் மந்திரி சபையின் விசேஷ கூட்டம் நிலைமை பற்றி ஆராய்ந்தது. மன்னர் கரண்சிங் நிலைமை பற்றி பாதுகாப்பு மந்திரி திரு சவானுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார். இன்று இந்திய மந்திரி சபையின் விசேஷகூட்டம் மீண்டும் நடைபெறுகிறது.

**பாகிஸ்தான் மறுப்பு**

காஷ்மீரில் பாகிஸ்தானியர் பெருமளவில் ஊடுருவல் செய்திருப்பதாகக் கூறுவது பொய் என பாகிஸ்தான் மறுத்திருக்கிறது.

காஷ்மீர் வந்திருக்கும் உல்லாசப்பிரயாணிகள் வழக்கம்போல் இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டு வருவதாயும் டில்லிச் செய்திகள் கூறுகின்றன.

## சிங்கப்பூர் பிரதமர் மூர்ச்சித்தார்

சிங்கப்பூர், ஆக 11

சிங்கப்பூர் பிரதமர் மலேசியாவிலிருந்து விலக நேர்ந்த காரணங்களை நிருபர்களிடம் விளக்கிக் கொண்டிருக்கையில் மூர்ச்சித்து விட்டார். அவ நிதானப்பட 15 நிமிஷம் ஆயிற்று.

"எனது வாழ்நாள் பூராவும் சிங்கப்பூர்—மலேயா ஒற்றுமைக் கனவு கண்டவன் நான். இப்படி நேர்ந்தது எனக்கு தாங்க முடியாத வேதனை தருகிறது" என மூர்ச்சிக்கு முன் அவர் சொன்னார்.

## வில்சன்

லண்டன், ஆக. 11

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து சென்றது பிரிட்டனுக்கு ஆச்சரியமளிக்கவில்லை என பிரதமர் திரு. வில்சன் அறிவித்தார்.

இந்தோனேஷியாவுக்கு எதிராக பிரிட்டன் மலேசியாவுக்கு ஆதரவளித்து வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

காமன் வெல்த்தில் புதிய நாடாக விரும்பும் சிங்கப்பூரை பிரிட்டன் ஆதரிக்கிறதென்றும் இவ்விஷயமாக இதர காமன்வெல்த் நாடுகளுடன் அது கலந்தாலோசித்து வருவதாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எந்தவேலையையும் வாலிபர்கள் ஏற்கத்தயாராகஇருக்கவேண்டும்"

## கொக்குவில் இந்துக்கல்லூரி விருந்தில் பேச்சு

உடுப்பிட்டி, புதன்

கொக்குவில் இந்துக்கல்லூரி பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் சங்கத்தின் வருடாந்த இரவு விருந்து மேற்படி கல்லூரியின் அலங்கரிக்கப்பட்ட திறந்தவெளியரங்கில் கல்லூரி அதிபர் திரு சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக யாழ். உதவி தொழில் அதிபர் திரு. பி நவரத்தினம் கலந்து கொண்டார்.

மாணவர் சங்கத்தலைவர் திரு பி சண்முகநாதன் வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:-

இவ் இரவு விருந்து எமது கல்லூரி-ம் மாணவர் சங்கத்திற்கு நல்லதோர் எதிர்காலத்தைத் தரும் என நம்புகிறேன். தொழிலாளர்களின் நலன்களைப் புரிந்துகொள்வதில் திரு நவரத்தினம் மிகவும் கவனம் வைப்பவர். அவரது உழைப்பால் தொழிலாளர்கள் நன்மை அடைவார்கள்.

பிரதம விருந்தினர் யாழ். உதவித் தொழிலதிபர் திரு பி நவரத்தினம் பேசுகையில், எமது நாட்டில் முன்மை பெற்று விளங்கும் கல்விக்கூடங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் ஒன்று என்பதில் பெருமையடைகிறேன். இந்துக்கல்லூரி அதிபரையும், ஆசிரியர்களின் மாணவர்களின் கல்வி ஊக்கத்தையும் நான் பாராட்டுகிறேன் கொக்குவில் இந்துக் கல்லூரி இன்று பல கட்டடங்களுடன் உயர்ந்துவிளங்குகிறது. அதிபர் திரு கந்தசாமியைப் போன்றவர்களின் அரிய சேவை எமது நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் தேவை படித்த வேலையற்ற வாலிபர்களை நான் தினமும் எனது காரியாலயத்தில் காண்கின்றேன். இன்றைய அரசாங்கம் வளர்ந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தீர்ப்பதில் பெரு முயற்சி எடுக்குமென நம்புகிறோம்.

எந்த வேலையையும் ஏற்றுக் கொள்ள வாலிபர்கள் தயாராக இருக்க வேண்டும், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களானாலும் நல்ல வேலை கிடைக்கும்வரை சிறிய வேலைகளைச் செய்யத் தயங்ககூடாது"

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிப் பிரதிநிதி செல்வன் கே. எம். அபுல்காசிம் பேசுகையில் கல்வியமைச்சர் கனம் இரியகொல்லையின் யாழ்நகர் விஜயத்தின் பின்னர் நாம் சிங்களம் படிக்கவேண்டியதன் அவசியத்தை உணர்கிறோம் மேல்நாடுகளுக்கு தமது பிள்ளைகளை படிக்க அனுப்பவர்

REGAL - JAFFNA
NOW SHOWING
Sophia Loren
Anthony Perkins
In
FIVE MILES
TO MIDNIGHT
(ADULTS ONLY)

இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!

ஈஸ்வல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொட்டாஞ்சேனை / செட்டியார்த்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மொடேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்) | தீபவொளி (நுவரேலியா) | கல்யாணி (காவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னார்)



எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
மற்றும்பலர் நடிக்கும்
நீதிக்குப்பின் பாசம்

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

உடுப்பிட்டி புதன்

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் கெ. முருகேசு கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் சமீபத்தில் திரு ஜோர்ஜ் ஆர் டி' சில்வா மாவத்தை மண்டபத்தில் திரு. பெ. ஜேம்ஸ் (ஆசிரியர்) தலைமையில் கூடியபோது கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- திரு. க.தா. மாணிக்கம், உப போஷகர்- திரு. பெ. ஜேம்ஸ், தலைவர்- திரு.க. இராசையா, உப தலைவர்-திரு டே. ஆ கைடஸ், செயலாளர்- திரு க. குணசிங்கம், உப செயலாளர்- திரு. க. செல்வரத்தினம், பொருளாளர்- திரு சி. குகதாசன், உப பொருளாளர்- திரு. கா. அம்பிகைபாலன், கணக்குப் பரிசோதகர்- திரு த. மாசிலமணி

ஐவர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

கள் அவர்கள் திரும்பி வரும்போது தனியாகவும் திடகாத்திரமாகவும் வரவேண்டுமென்றே பெரிதும் விரும்புகிறார்கள ஆண்களையும் பெண்களையும் சேர்ந்து படிக்கவிட்டால் தீயும் பஞ்சும், காந்தமும் இரும்பும் போல் இணைந்து விடுவார்கள் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்" என்று கூறினர்

செல்வன் ஏ. மகேந்திரராஜா, செல்வி தையல்நாயகி கந்தையா, திரு எஸ். வி. பாலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

---

## சிரமதான தொண்டர்களுக்கு பயிற்சி

பம்பலப்பிட்டி, புதன்

சர்வோதய இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு சிரமதானத்தில் ஈடுபடும் தொண்டர்களுக்கான விசேஷ பயிற்சி வகுப்பொன்றை அகில இலங்கை காந்திசேவா சங்கம் விரைவில் ஆரம்பிக்கவிருக்கின்றது. பயிற்சி சுமார் ஒரு வருடகாலம் நீடிக்கும்

மகாத்மாகாந்தியடிகளின் சத்தியசோதனையை அடிப்படையாக வைத்து சர்வோதயம் பற்றியும் உலகின் பல பாகங்களிலும் சமூகசேவை இயக்கங்கள் எவ்வாறு இயங்கி வருகின்றன என்பது பற்றியும் சிரமதான இயக்கத்தை இலங்கையில் விஸ்தரிப்பது பற்றியும் தொண்டர்கள் இப் பயிற்சியில் கூடிய விளக்கங்களைப் பெறுவர். சகல இன, மத மக்களையும் ஒன்றுபடுத்தக்கூடியமுறையில் சகல சமயங்களைப் பற்றிய விரிவுரைகளும் இப் பயிற்சியில் இடம் பெறுவதுடன் மனோதத்துவத்தில் அறிவைப்பெற உதவுவதும் இப்பயிற்சியின் நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பகுதியிலுள்ள தொண்டர்களுக்கான பயிற்சி அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்தின் கொழும்புக்கிளை காரியாலயத்தில் நடைபெறுவதற்கு ஒழுங்குசெய்யப்படுகிறது.

வாரத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மாலை ஆறு மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறுமென்றும் இதில் பங்குபெறவிரும்பும் தொண்டர்களை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் கொழும்புக்கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

சுழிபுரம், செவ்வாய்

மாதகல் கிராமசேவையாளராக் கடமையாற்றும் திரு. ... சுழிபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



தென்புலோலியூர் உதய கதிர்காம ஆலய தீர்த்தோற்சவம் கதிர்காம தீர்த்தோற்சவ தினமாகிய இன்று நடைபெறும், இவ்வாலயத்திலுள்ள தான்தோன்றிய சக்கரமமைந்த சுயம்பு லிங்கத்தையும் ஆறுமுகசுவாமி எழுந்தருளுவதையும் படத்தில் காணலாம்.

## பயிற்சி உண்டு; வேலை உத்தரவாதமில்லை

யாழ்ப்பாணம், வியா.

இலங்கையிலிருந்து கொழும்பிலுள்ள ஒரு ஏஜன்சி மூலமாக பிரிட்டனுக்கு தாதிகள் பயிற்சி பெற சென்றுள்ள பெண்கள் அங்கு சிற்சில கஷ்டத்துக்குள்ளாவதாக அறியப்படுகிறது முக்கியமாக இவர்களுக்கு அங்கு பயிற்சிக் காலத்தின்போது கொடுக்கப்படும் வேதனம் அவர்களது வாழ்க்கைச்செலவுக்கு போதாதிருக்கிறதாம் இதனை ஒருவாறு சமாளித்து இங்கு பயிற்சி முடித்துக்கொண்டு வந்தாலும் இலங்கையில் அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான உத்தரவாதம் இல்லையாம். அரசாங்க சார்பிலோ உபகாரச்சம்பளம் பெற்றோ அவர்கள் செல்லவில்லையென்பதே காரணம்

கொழும்பிலுள்ள தனிப்பட்ட ஏஜன்சி பிரிட்டனில் தாதிகளாகப் பயிற்சிபெற விரும்பும் பெண்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு தமக்குரிய கமிஷனை எடுத்தபின் இவர்கள் அங்குசென்று பயில்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அறியப்படுகிறது.

---

## அப்துல்லா செலவை டில்லி கொடுக்கிறது

சென்னை, ஆக. 11

ஷேக் அப்துல்லாவை காவலில் வைத்திருப்பதற்காக ராஜ்ய அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு பூராவையும் மத்திய அரசாங்கம் கொடுக்கிறது என முதன் மந்திரி திரு பக்தவத்சலம் அங்கத்தினரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

கோடைக்கானலில் ஷேக் அப்துல்லா வைக்கப்பட்டிருக்கும் பங்களாவைப் பழுது பார்க்க அரசாங்கம் ரூபா 60000 செலவிட உத்தேசத்திருப்பதாக அங்கத்தினர்கள் புகார் கூறினர்.

ஷேக்அப்துல்லாவைப் பாதுகாக்க ராஜ்ய அரசாங்கம் நிறைய பொலிஸ்காரர்களை அங்கு நிறுத்திவைத்திருப்பதும், ஜில்லா கலெக்டருக்கு அதிகப்படி வேலை கொடுத்திருப்பதும் சரிதானா என்று கேட்கப்பட்டது. நாட்டின் நலனைப் பாதுகாப்பதில் ராஜ்ய அரசாங்கத்திற்கும் பங்குண்டு என்றும் இதுசம்பந்தமாக முயற்சிகளையோ செலவையோ செய்யாமல் தட்டிக்கழிக்க முடியாது என்றும் பக்தவத்சலம் கூறினார்.

## ஆசிரியர்களுக்கு ஒழுங்கு விதிமுறைகள்

பம்பலப்பிட்டி, புதன்

முதல்முறையாக ஆசிரியர்களுக்கு ஒழுங்கு விதிமுறைகள் கல்வி மந்திரி காரியாலயத்தினரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. சில ஆசிரியர்கள் தங்கள் பதவிகளை துர்ப்பிரயோகம் செய்ததாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட, வைத்திய தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு ஒழுங்குவிதி முறைகள் இருக்கின்றதென்றும் ஆசிரியர்களுக்கு அப்படியான ஒரு கட்டுப்பாடு இல்லை என்றும் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

---

## மடுவில் இரத்தம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் நடமாடும் இரத்தவங்கி இயக்கத்தினர்கள் வெள்ளிக்கிழமை மடு மாதா தேவாலயத்திற்குச் சென்று தேவாலய ஆஸ்பத்திரியில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் இரத்தம் சேகரிக்க ஒழுங்குகள் செய்துள்ளனர். இதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாண மேற்றிராணியார் டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை செய்து உதவியுள்ளார்.

---

## அதிகாரிகள் குழு விசாரணை செய்யும்

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டுறவு ஊழியர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது. இந்த குழுவை கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன சபை தெரிவுசெய்யும் இதுவரை இந்த விசாரணைகளை ஒருவர் மட்டுமே நடத்தி வந்தார். குற்றவாளியாகக் காணப்பட்ட ஊழியரை வேலை நீக்கம் செய்யும்படி சிபார்சு செய்யும் அதிகாரம் அவரிடம் இருந்து வந்தது.

---

## சங்காபிஷேகம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் பறாளை பிள்ளையார் கோவில் மகாசங்காபிஷேகம் ஆகஸ்ட் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாக நடைபெறவிருக்கின்றது. அன்று பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் இரவு விசேட இசை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### நிரந்தர கூலியாட்கள் தேவை

தகைமைகள்:- வயது 20-க்கும் 30-க்குமிடையில், இலங்கைப் பிரஜாவுரிமை. சாக்குத்தைக்குமனுபவம். (விரும்பத்தக்கது)

18-8-65-க்கு முன் பதிவுத் தபாலில் இரண்டு நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
வடபகுதி விவசாய உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சமாசம்,
600 யாழ்ப்பாணம்.

## Order Nisi

In the District Court of Jaffna

In the matter of the intestate estate of the late Vallipuram Sellathurai of Valamari, Kadduvan.

Deceased.

Sinnathamby Vallipuram of Valamari Kadduvan.

Petitioner,

Testamentary No 1589 Jurisdiction,

Achchimuttu wife of S. Vallipuram of do

Respondent

This matter coming on for disposal before N. M. J. Rajendram Esqire, District Judge Jaffna, on the 20th day of January 1965 in the presence of Mr N. Sithambaranathan proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner having been read

It is ordered that the above named petitioner be declared entitled to letters of Administration to the estate of the abovenamed deceased as father of the said deceased and that the same be issued to the petitioner unless the respondent or any other person interested shall appear before this court on or before the 12th day of March 1965 and show cause to the satisfiction of this court to the contrary

This 20th day of January 1965

Drawn by:

Proctor for Petitioner

(Sgd) N.M.J. Rajendram
District Judge

12-3-65:-Time to show cause extended till 4-6-65

(Sgd) N.M.J. Rajendram
District Judge Jaffna

4-6-65:- Time to show cause extended till 13-8-65

(Sgd) N.M.J. Rajendram
District Judge Jaffna

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 12-8-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை, 7-00 பேச்சு, 7-15 வேல்விழா அஞ்சல், 7-45 நாடகம், 8 00 முனைவிம்பிழ்ச்சி, 9-15 பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் இருந்து வேல்விழா அஞ்சல்.

விளையாட்டுத்துறையில்

# பெண்களின் முன்னேற்றம் சமுதாய வளர்ச்சிக்கு உதவும்

பருத்தித்துறை, புதன்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் சென்ற வெள்ளிக்கிழமை மாலை வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. விசுவநாதன் தமது தலைமையுரையில், பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றமடைவதுடன் விளையாட்டுத் துறையிலும் விறுநடை போட்டு முன்னேற்றம் அடைந்துவருவது சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பயன் தருவதாகும் என்றும் இன்றைய தேசிய அரசாங்கம் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு பாடசாலைகளுடன் ஸ்தலஸ்தாபன, பொது நிறுவனங்களுக்கும் போதிய உதவியும் ஆதரவும் அளிக்கும் என நம்பிக்கையுடன் கூறினார்.

ஐந்து இல்லங்கட்கிடையே நடைபெற்ற போட்டி விளையாட்டுக்களில் மொத்தம் 214 புள்ளிகளைப் பெற்ற திலகவதி இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

சுபேதவதி, சிவஞானவதி, புனிதவதி, பகவதி ஆகிய இல்லங்கள் முறையே 189, 104, 104, 64 புள்ளிகளைப் பெற்றன.

**சாம்பியன்கள்**

கீழ்ப்பிரிவு- வி, சரோஜினிதேவி (சுபேதவதி இல்லம்)

மத்திய பிரிவு- தே. மகேஸ்வரி தேவி (சுபேதவதி இல்லம்)

மே. பிரிவு- வி. சுதந்திர தேவி (திலகவதி இல்லம்)

பிரதம பாடசாலைப் போட்டிகளில் 99 புள்ளிகளைப் பெற்ற சுபேதவதி இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

திலகவதி, புனிதவதி, சிவஞானவதி, பகவதி ஆகிய ஏனைய நான்கு இல்லங்களும் முறையே 91, 70, 53, 35 புள்ளிகளைப் பெற்றன.

திருமதி விசுவநாதன் பரிசில்களை வழங்கினார்.

### விளையாட்டுப் போட்டிகள்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுப் போட்டி பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு பி ஜெபேட் சில்வா தலைமையில் நடைபெற்றது.

பெண்களுக்கான 5 மைல் சைக்கிலோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர் பின்வருமாறு:-

செல்விகள்: கே ஜெயகுமாரி, கே மகேஸ்வரி, கே சசிலா தேவி, பி சௌதாமினி,

15 மைல் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாவது இடத்தை திரு எஸ் இராசரத்தினமும் இரண்டாவது இடத்தை எஸ் சாம்பசிவமூர்த்தியும் மூன்றும் இடத்தை ஏ ஜெயச்சந்திரனும் பெற்றனர்.

2 1/2 மைல்நீச்சல் போட்டி: என் அருளமச்சந்திரன், ஆர் நவரத்தினம், கே ஞானபண்டிதன்.

சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டோர் பின்வருமாறு பாலர் பிரிவு: வே ரவீந்திரதாஸ்,

கீழ்ப்பிரிவு: ஏ இலட்சுமிகாந்தன்,

மத்திய பிரிவு: எஸ் ஆறுமுகம், வி பொன்னம்பலம்,

மேற்பிரிவு: வி நாராயணசாமி, எஸ் மகாலிங்கம், வி நவகோடி,

அதிமேற் பிரிவு: வி மயில்வாகன சுந்தரம், எஸ் வாமதேவன், எஸ சர்வானந்தவேல்,

கீழ்ப்பிரிவுபெண்: எஸ சர்வதயாபரி,

பாலர் பிரிவு பெண்: டி மகேந்திரலட்சுமி.

திரு சில்வா பரிசில்கள் வழங்கினார்.

### சேரன இல்லத்திற்கு முதலிடம்

பருத்தித்துறை, புதன்

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சேரன் இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

சோழ, பாண்டிய இல்லங்கள் 2-ம் 3-ம் இடங்களைப் பெற்றன.

கெல்லியடி பட்டின சபைத் தலைவர் திரு வே சு பொன்னையா, உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரம், பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் ஆகியோர் பிரதம பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்

### புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

யாழ் மாவட்ட பதிவுகாரர் சங்க வருடாந்தக் கூட்டம் திரு என் முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. கடப்பு வருட உத்தியோகத்தர் வருமாறு: தலைவர் என் முத்துக்குமாரசுவாமி உபதலைவர் எஸ் சு பிரமணியம் எம் துலவீரசிங்கம் காரியதரிசி திரு கே கிருஷ்ணர் தனாதிகாரி திரு சீ தம்பி பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### திறப்பு தொலைந்ததால்..

திருக்கோணமலை, புதன்

கூட்டுறவு அபிவிருத்தி இலாகா உதவி கமிஷனரின் காரியாலயத்திலுள்ள இரும்புப் பெட்டித் திறப்புத்தொலைந்து போய்விட்டதால் கணக்குப் பார்க்கவந்த கணக்காளர் தமது வேலையைச் செய்யமுடியாது திரும்பவேண்டி நேரிட்டது இந்தத் திறப்பு எவ்விதம் தொலைந்தது என்பது மர்மமாக இருப்பதாக அறியப்படுகிறது

### கிரீஸில் இன்னும் நெருக்கடி

ஏதன்ஸ், ஆக. 11

கிரீஸில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு மன்னர் விடுத்த கோரிக்கையை மத்திய ஐக்கியக் கட்சி நிராகரித்துவிட்டது. இக்கட்சி முன்னாள் பிரதமர் திரு பாபந்திரியோவை ஆதரித்து நிற்கிறது.

## வரி விளம்பரம்

### காணவில்லை

மஹவெலவத் தோட்டம், 2-ம் டிவிஷன் சந்தனத்தின் மகன் புலவேந்திரன் வயது 14 1/2, பொது நிறம், திருநெல்வேலியிலிருந்து 15-7-65 தொடக்கம் காணவில்லை. கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு வெகுமதி 50 ரூபா அளிக்கப்படும். தகவல்கொடுக்கவேண்டிய விலாசம்:- என். சந்தனம், 7/2, றெல்வே ரைட் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 757

### கல்வி

B A;, B. Sc Special & General G. A. Q, G S Q G C. E, (A/C & O/L- Arts & Science- G C E (A/C — O/L Arts & Science) December 1965 Examination Rapid Revision மாலை நேர வகுப்புகள் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஒழுங்காக நடைபெறுகின்றன. தூர இடங்களிலுள்ளவர்களுக்காய 3 பாடசாலை விடுமுறைகால வகுப்புகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். மாணவர்கள் தொகை கண்டிப்பாக வரையறுக்கப்படுமாதலால் உடனே சேருதல் நல்லது. கௌரவ பதிவாளர் வடபிரதேசக் கல்விக்கழகம் நமசிவாயவித்தியாலயம், கொக்குவில், யாழ்ப்பாணம். 769

### தேவை

திறமையுள்ள சேல்ஸ் (போய்ஸ்), சாவகச்சேரி, பருத்தித்துறை ஊர்காவற்றுறை' அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். டீ' ஸ்டோர்ஸ், டாம்டன் சென்றல் சேவிஸ் ஸ்டேசன், (பின்), சுன்னாகம். 763

எங்களது இலங்கா தயாரிப்புகளை வீட்டிற்கு வீடு சென்று விற்பனை செய்யத்தக்க பெண்களும் ஆண்களும் தேவை. விண்ணப்பிக்கவும் மனேஜர், இலங்கா லபோரிட்டறீஸ் 46, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 764

பல் வைத்தியசாலைக்கு 15 வயதுக்குட்பட்ட பையன்கள் தேவை; வி. ரி. பெர்னாண்டோ 11, பிரதான தெரு, யாழ்ப்பாணம். 768

### விற்பனைக்கு

செல்லு, மாவு, மிளகாய் இயந்திரம் மோட்டர்ஸ்ராட்டருடன், சந்தனத்தூள், மூக்குத்தூள் அரைக்கும் கல்மோட்டரும் விற்பனைக்குண்டு. கந்தசாமி, 123/3, அம்பலவாணர் வீதி. யாழ்ப்பாணம். 770

சண்டிக்குளியில் 2 பரப்பு வீடும் வளவும் விற்பனைக்கிருக்கிறது, கச்சேரி, பள்ளிக்கூடங்களுக்கருகாமையில். விபரங்கட்கு T T S மணியம் C/o K சிவானந்தன் 89, கண்டி ரோட், சண்டிக்குளி, யாழ்ப்பாணம். 759

பெர்குசன் ராக்டர் மண்ணெண்ணெய். 1965-ம் ஆண்டுக்கு லைசென்ஸ், இன்சூரன்ஸ் உண்டு. உடன் பாவிப்புக்கு உகந்தது. 388 நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் விசாரிக்கவும். தொலைபேசி யாழ்ப்பாணம், 7113. 742

சுத்தமான ஜே. சி. சுத்தமான ஐசார், மற்றும் கலப்புள்ள இளங்கன்று பால் மாடுகள் நாலு விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: ப சி அ. பொன்னுத்துரை, இல: 30, நாச்சிமார் கோயில் ரோட், யாழ்ப்பாணம். 761

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் ரோட்டில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு ப. சி. அ. பொன்னுத்துரை, இல: 30, நாச்சிமார் கோயில் ரோட், யாழ்ப்பாணம். 762

**தொய்வு, காசம், நீரழிவு, வெண்ணை முதலிய பலகொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணத்தில்

### இந்திய சுதந்திர தின விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை - இந்தியர் சங்கத்தினர் இம்மாதம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இந்திய சுதந்திரதினம் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

சுதந்திரதினக் கொண்டாட்டம் இலங்கை - இந்தியர் சங்கக் காரியாலய வளவினுள் பிற்பகல் 4-30 மணியளவில் ஆரம்பமாகும். மாலை 6-30 மணிக்கு இந்தியத் தூதராலய திரைப்படப் பிரிவினரின் இந்திய சுதந்திரதின வெள்ளிவிழா, சுவாமி விவேகானந்தர், விநோபாவா மற்றும் சில சிறப்புமிக்கத் திரைப்படங்களும் மற்றும் பலவும் காட்டப்படவிருக்கின்றன.

### மருந்து தட்டுப்பாடு

கோண்டாவில், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் தமக்கு வேண்டிய மருந்துகளை இங்கு பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இவர்கள் டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகளை வாங்குவதற்கு மருந்துச்சாலைகளை நாடவேண்டியுள்ளது.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# தேசிய அரசாங்கத்தின் பொருளாதார விருத்தித் திட்டம்

## நிதிமந்திரியின் 9 அம்ச விளக்கம்

பம்பலப்பிட்டி, புதன்

வாழ்க்கைச்செலவைக் குறைத்து அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு இந்த ஆண்டின் வரவு—செலவுத் திட்டம் வழிவகுத்துள்ளது என்றும் தேசியஅரசாங்கத்தின் பிரதானநோக்கம் பொருளாதாரஅபிவிருத்தித் திட்டங்களில் கவனம்செலுத்துவதேயாகும் என்றும் நிதியமைச்சர் திரு. வன்னிநாயக்கா வரவுசெலவுத்திட்டம் பற்றி எடுத்துக்கூறியுள்ளார்.

தேசியஅரசாங்கம் கையாளவிருக்கும் வழிமுறைகள் வருமாறு:

பொருளாதார அபிவிருத்திக்காக முதலீடுசெய்வதை மேம்படுத்தல். திட்டங்களை சீர்திருத்தி அமைத்து வெளிநாட்டின் உதவியுடன் நாட்டில்பொருளாதாரநிலையை விருத்திசெய்தல், அரிசி, மீன். ... தொழிலாளர் சேமநலத்தை பெருக்குவதற்கும், வேலைவாய்ப்புக்களை உண்டாக்குவதற்கும் புதியமுறைகளைக் கையாளுதல். தினசரி உயர்ந்துகொண்டே செல்லும் வாழ்க்கைச்செலவை குறைக்க நடவடிக்கை எடுத்தல், சேமிப்பை அதிகரிக்கவும் உற்பத்தியாளர்களுக்கு கடன் உதவிகள் வழங்கவும் சிறந்த வழிவகைகளை செயற்படுத்தல். நாட்டின் பொருளாதாரத்தை பெருக்குவதில் ஈடுபட்டிருக்கும் தனியார்துறையினருக்கு வேண்டிய உதவிகளை ஆக்கிக்கொடுத்தல், பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு வரிஅமைப்பில் மாற்றம் செய்தல், உள்ளூரில் தயாராகும் பொருள்களை ஏற்றுமதி செய்வதன்மூலமும் வேறு முயற்சிகள் மூலமும் வெளிநாட்டுச்செலாவணியை அதிகரித்தல், நிதிநிலையை ஸ்திரப்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் கடும் சண்டை

## 1200 பாகிஸ்தானியர் ஊடுருவியுள்ளனராம்

### இந்திய இராணுவ ரோந்து படைகள் பலப்படுத்தப்பட்டன

ஸ்ரீநகர், ஆக 10

ஜம்மு காஷ்மீரின் பல பகுதிகளிலும் பாகிஸ்தானியருக்கும் இந்திய ராணுவ ரோந்து படையினருக்குமிடையே கடுமையான சண்டைகள் நடைபெற்று வருவதைத்தொடர்ந்து; போர் நிறுத்தக்கோடு முழுவதிலும் இந்தியராணுவ ரோந்து படைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய எல்லைக்குள் ஊடுருவல்செய்த பாகிஸ்தானியர்கள் ஸ்ரீநகரின் தென்மேற்கு பகுதியிலுள்ள பொலிஸ்நிலைய மொன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம்நடத்திப் பாலங்களைத் தகர்த்தெறிவதில் ஈடுபட்டிருக்கிறார்களென்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

ஜம்மு காஷ்மீருக்குள் 1,200 ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர்கள் 80 மைல்வரை ஊடுருவல் செய்துள்ளனரென்றும், நிலைமை அபாயகரமாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் மந்திரிசபை இன்று அவசரமாகக்கூடி காஷ்மீர் நிலைமை குறித்து விவாதித்தது.

காஷ்மீரில் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் "காஷ்மீர் குரல்" என்ற புரட்சிசபை வானொலி இந்திய அரசாங்கத்திற்கு முழுமாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றதென்றும், புரட்சி சபையினர் புதிய திட்டங்களைத் தயாரித்துள்ளதாகவும் அந்த வானொலி அறிவித்துள்ளது.

கடந்த ஆறு நாட்களுக்குள் 1200 பாகிஸ்தானியர்கள் ஸ்ரீநகருக்குள் நுழைந்துவிட்டனர் என்றும், ஜம்மு காஷ்மீரில் பாலங்களை உடைத்து, தொடர்புகளை துண்டிப்பதே இவர்களின் முக்கிய நோக்கமாக இருக்கிறதென்றும் கடைசி செய்திகள் கூறுகின்றன.

# மூன்று மந்திரிகள் யாழ்ப்பாணம் வருகின்றார்கள்

### அரசாங்க செயலகத்தை உள்நாட்டுமந்திரி திறந்துவைப்பார்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் எம். பியும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் அழைப்பை ஏற்ற தேசிய அரசாங்கத்தின் மூன்று அமைச்சர்கள் இம்மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர். இம்மாதம் 21-ம் திகதி உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யு தகநாயகா, தொழில் வீடமைப்பு வேலை வசதிகள் அமைச்சர் திரு எம் எச் முகம்மது, சுகாதார மந்திரி திரு எம் டி எச் ஜயவர்த்தன ஆகிய மூவரும் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்க செயலகக் கட்டிடத்தை உள்நாட்டு மந்திரி திரு டபிள்யு தகநாயக இம்மாதம திறந்துவைப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட இக்கட்டிடத்தின் திறப்புவிழா சென்றவருடம் செப்டம்பர் மாதத்தில் அப்போது நிதி மந்திரியாகவிருந்த டாக்டர் என். எம். பெரேராவினால் திறந்து வைக்கப்படவிருந்தது. வேலைகள் அப்போது பூர்த்தியடையாததனால் திறப்புவிழா பின்போடப்பட்டது.

தொழில், வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகமது கரையூரில் புதிய வீடமைப்புத்திட்டத்திற்கான அத்திவாரக் கல்லை இம்மாதம் 21ம் திகதி நாட்டுவார்.

சுகாதார அமைச்சர் திரு. எம் டி. எச். ஜயவர்த்தன, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் நிலைமையை நேரில்சென்று பார்வையிடுவார்.

## நல்லூர் உற்சவம் இன்று

பகல்உற்சவம்—வெள்ளி மயில், அன்னம்; இரவுஉற்சவம்—பச்சைமயில்அன்னம்.

திருப்புகழ் மண்டப இசையரங்கு— நல்லை திருச்செல்வி செல்வம் நாராயணசாமி-பாட்டு, வண்ணை செல்வி ஞானம்பிள்ளை முருகேசு-வயலின், வண்ணை திரு. வி. ஜெயசுந்தரம் மிருதங்கம்.

கந்தபுராண விரிவுரை— ஸ்ரீமுருகன் தண்ணீர்ப்பந்தலில் நடைபெறும் கந்தபுராண விரிவுரையில் திரு. மணிபாகவதர் "தசெரஞ்சவெற்பு" எனும் பொருள்பற்றி கதாகாலக்ஷேபம்.

ஃ ஃ ஃ

காரைநகர் கதிர்காமசுவாமி கோயில் தீர்த்தோற்சவம் வியாவில் சமுத்திரத்தில் காலையில் நடைபெறும். பின்பு ஐயனார்கோவிலில் தீர்த்தமாடி வந்தவுடன் தீக்குளிப்பும் இரவு துவஜாரோகணமும் நடைபெறும்.

# யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் செல்லும் யாத்ரிகர்

### ரயில் நிலையங்களில் அவதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதியிலிருந்து கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களின் தொகை இவ்வருடம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து புகையிரதம் மூலம் தினமும் இரண்டாயிரத்திற்கு அதிகமான யாத்திரிகர்கள் சென்றவண்ணமிருக்கிறார்கள். இதுதவிர பஸ்களிலும், வான்களிலும், லொறிகளிலும், கார்களிலும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

மூன்று வாரங்களுக்கு முன் தொடங்கியே புகையிரதத்தில் பெட்டிகள் அதிகரிக்கப்பட்டிருந்தபோதிலும், கடந்த வாரம் முதற்கொண்டே யாத்திரிகர்கள் பெருமளவில் பிரயாணம் செய்கிறார்கள். யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் மட்டுமின்றி வடபகுதியிலுள்ள எல்லாப் புகையிரதநிலையங்களிலும் யாத்திரிகர்கள் தினமும் நீண்ட 'கியூ' வரிசையில் நின்று டிக்கட் பெறுகிறார்கள்.

யாழ்ப்பாணம், கொக்குவில் கோண்டாவில் மற்றும் இடங்களிலுள்ள யாத்திரிகர்கள் புகையிரதத்தில் இடம் பெறும் பொருட்டு காங்கேசன்துறைக்கு சென்று அங்கிருந்து பிரயாணம் செய்கின்றார்கள் இதனால் புகையிரதம் யாழ்ப்பாணத்திற்கு வரும்பொழுது 3-ம் வகுப்பு பெட்டிகளில் நின்று செல்லக்கூட இடமில்லாமல் போய்விடுகிறது யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் யாத்திரிகர்கள், 3-ம் வகுப்பு டிக்கட்டுடன், 1-ம் 2-ம் வகுப்புகளிலும் பிரயாணம் செய்கின்றார்கள். அப்படியிருந்தும் கூட சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து பிரயாணம் செய்யும் யாத்திரிகர்கள், புகையிரதத்தில் இடமில்லாததால் புகையிரத நிலையத்தில் தங்கி மறுநாள் பிரயாணம் செய்கின்றார்கள்.

பருத்தித்துறை நெல்லியடி, கரவெட்டி, வரணி ஆகிய இடங்களிலிருந்து வரும் யாத்திரிகர்கள் காலையில் செல்லும் புகையிரதத்தில் இடம் கிடைக்காததால் மாலைவரை கொடிகாமம் புகையிரத நிலையத்தில் தங்கி இரவு வண்டியில் செல்கின்றார்கள்.

இரவு மெயில்வண்டியில் சில பெட்டிகளின் வெளிச்சம் இல்லாததால் யாத்திரிகர்கள் மிகவும் கஷ்டமடைகிறார்கள். அந்நேரத்தில் அவர்கள் "அரோகரா" என்ற நாமத்தை உச்சரித்த வண்ணம் பிரயாணம் செய்கிறார்கள், சில பெட்டிகளில் பெண்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்தபடி செல்கின்றார்கள். இக்கூட்டுப் பிரார்த்தனையில், அப்பெட்டியிலுள்ள யாத்திரிகர்கள் எல்லோரும் பக்திப் பரவசத்துடன் கலந்துகொள்கிறார்கள்.

### காணவில்லை

எனது மகன் மேரி ஜோசேப் அன்ரனி என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவன் 9—8—65 தொடக்கம் காணமற்போய் விட்டார். பொதுநிறம், நீலக் காற்சட்டையும் வெள்ளை ஷேட்டும் அணிந்திருந்தார். கண்டுபிடிப்பவர்கள் தயவுசெய்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலயத்தில ஒப்படைக்கவும் அல்லது தகவல் கொடுக்கவும். [illegible] பண்டத்தரிப்பு.

## நீரழிவுநோயுள்ள ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளென்றோ அல்லது குறிப்பிட்ட முறைகளை மேற்கொண்டபின் கார் ஓட்டுங்களென்றோ எடுத்துக்கூறி அவர்களைச் சமாதானப்படுத்த டாக்டர்கள் படாத பாடு படுகின்றனர். இதற்கிடையில் விபத்துகளுக்கும் வியாதிகளுக்கும் இடையே உள்ள உறவுகளைப்பற்றி விரிவாக ஆராய்ந்து விளக்கமான அறிக்கையொன்றை டாக்டர் எச் பிராங்கி என்பவர் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்; ஜெர்மனியில் உள்ள ஊ ஜ்டிர்ச் என்ற பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நிபுணர் இவர்.

போக்குவரத்துவிபத்துக்களினாலும் நோய்களினாலும் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகிறது இருதயமும், இரத்த ஓட்டமும்தான், இந்த வியாதிகளே அவர்களிடம் அதிகமாக காணப்படுகின்றன; ஆகவே இந்த நோய்களை முக்கியமான நோய்களாக நாம் இங்கு கருதலாம். இருதயநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கார் ஓட்ட முற்றிலும் இங்கு தடைவிதிக்கப்படுகிறது. ஆகவே டாக்டர் பிராங்கி என்பவரின் அனுபவத்தின்படி இப்படிப்பட்டவர்கள் கார்களை ஓட்டலாமா, இல்லையா என்பதை ஆறுமாதங்களும் அதற்குடபின்பும் தான் நிச்சயமாக அவர்கள் தகுதிபற்றிக் கூறமுடியும். ஏன் அப்படிக் கடும் தடை விதித்தாரென்றால், இருதயக்கோளாறு சரியாக, கொஞ்சக்கால அவகாசம் வேண்டும்; அத்துடன் இந்தக்காலத்திற்குள் மீண்டுமொரு இருதயக்கோளாறு அதிர்ச்சி ஏற்பட்டால் அது மிகப் பெரும் ஆபத்தாக இருக்குமென்பதை நினைத்தே அப்படி டாக்டர் பிராங்கி தடைவிதிக்கிறார்.

நீரழிவுநோய் உள்ளவருக்குத் தனி விதி விதிக்க வேண்டுமென்று இங்கு கருத்து ஏற்பட்டுவருகிறது. ஜெர்மன ஐக்கியகுடியரசில் மட்டுமின்றி உலகில் மற்ற நாடுகளிலும் கூட நீரழிவுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. நீரழிவுநோய் உள்ளவர்களென்பதினால் மட்டும் அவர்கள் கார்களை ஓட்டுவதைத் தடுத்துவிடஇயலாது. 15 ஆண்டுகளாக கூட நீரழிவு வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களும் இருக்கின்றனர். இவர்கள் கார் ஓட்டுவது மிகவும் ஆபத்தானது, ஏனென்றால் உடல் உயிர் இன அணுக்களில் திடீரென்று பெரும்மாறுதல் உண்டாகக் கூடும், இது உயிருக்கே ஆபத்தாகிவிடலாம். உதாரணமாக நீண்ட தூரத்திற்கு இவர்கள் கார்களை ஓட்டிச் சென்றால் இவர்களின் இரத்த அழுத்தம் விரைவில் மாறுதல் அடைந்து அதிர்ச்சியடையக் கூடிய அபாய அறிகுறிகள் உண்டாகும். அப்படிப்பட்ட நீரழிவு உள்ள டிரைவர்கள் சிக்கலான, நெருக்கடியான போக்குவரத்து நிலைகளைச் சமாளித்துவிட முடியாது!

# பட்ஜட் பற்றி மேலும் பல கருத்துக்கள்

கொழும்பு, புதன்

"உணவுப்பொருட்கள், மண்ணெண்ணை, மற்றும் அத்தியாவசியப் பொருட்கள்மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகள் அகற்றப்பட்டதால் வாழ்க்கை செலவு குறைய வழிபிறக்கும். பொதுமக்களின் பளுவை அகற்றி நிவாரணம் அளிக்க அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துள்ளது ஆனல் பொதுமக்கள் அந்த சுகத்தை உரிய முறையில் பெறுவதற்கு வர்த்தகர்கள் தக்க முறையில் நடந்துகொள்ளவேண்டும். தலைவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் புதிய பட்ஜட் யோசனைகளை வரவேற்பார்கள்" என்று குடும்பத் தலைவர்கள் சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவரான திருமதி சுவர்ண குணசேகரா பட்ஜட் குறித்து அபிப்பிராயம் தெரிவித்தார்.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி திரு. என். சண்முகதாசன் தெரிவித்ததாவது:

பட்ஜட் மீது லேசான கண்ணோட்டம் செலுத்தியதும் அது வெளிநாட்டு கம்பனிகளுக்கும் உள்நாட்டு வர்த்தகர்களுக்கும் சலுகை செய்வதற்காகவே தயாரிக்கப்பட்டதாக தோன்றுகிறது. இப்பொழுது எதுவும் சொல்வது கடினம். அத்தியாவசிய பொருட்கள், உணவுப்பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகள் முற்றாகவும், ஒரு பகுதியாகவும நீக்கப்பட்டதை பொதுமக்கள் முற்றிலும் அனுபவிக்க முடிகிறதா? அதாகு மொத்த விற்பனையாளர்கள் உதவி செய்வதற்கா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை பயன்படுத்திக்கொண்டு வர்த்தகர்கள் தங்கள் பணப் பைகளை நிரப்ப இடமுண்டு.

மொத்தத்தில் பட்ஜட் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு உதவும் நோக்குடனேயே பட்ஜட் தயாரிக்கப்பட்டுள்ளது.

தோட்ட முதலாளிமார் சங்கத்தின் தலைவர் திரு வி. கடேசன் பட்ஜட் யோசனைகளை குறித்து தெரிவித்ததாவது:

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் முயற்சிக்கு எமது சங்கம் பூரண ஆதரவளிக்க முன்வந்துள்ளது இதனால் உள்நாட்டு உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்லாமல் வெளிநாட்டு செலாவணியையும் மிச்சப்படுத்த முடியும். விவசாயத்துக்கு உபயோகிக்கப்படும் உபகரணங்கள் மீதான தீர்வையை அகற்றியமையிட்டு எமது சங்கம் மகிழ்ச்சியடைகிறது.

லங்கா வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு. ஜே. எல். எம். பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகள் நீக்கப்பட்டதால் மக்கள் தங்கள் வரவு-செலவை சமன் செய்து சேமிப்பை அபிவிருத்தி வேலைகளில் முதலீடு செய்ய முடியும்.

## தீர்தோற்சவம்

உரும்பராய், புதன்

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் ஆகஸ்ட் 12-ந் திகதி வியாழக்கிழமை மாலை நடைபெறும். கூட்டுப்பிரார்த்தனையும் மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

## சாஸ்திரி பர்மா செல்வார்

ரங்கூன், ஆக. 11

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி விரைவில் பர்மாவுக்கு விஜயம் செய்வார் என ஏற்கனவே இங்கு விஜயம் செய்திருக்கும் திரு பி கே சபூர் கூறினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org